# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – இரண்டாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## P202 சமயத் தமிழ் இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மணிமேகலை சிவபெருமானை எப்பெயரால் குறிப்பிடுகிறது?
2. பஞ்ச புராணம் என்பவை யாவை?
3. தொண்டர்சீர் பரவுவார், உத்தமசோழப் பல்லவன் என்னும் சிறப்பிற்குரியவர் யார்?
4. கந்தர் அனுபூதி பாடியவர் யார்? பாடல் தொகை எத்தனை?
5. முப்பத்தாறாயிரப்படி அருளியவர் யார்?
6. தொண்டரடி பொடியாழ்வார் அருளிய பிரபந்தங்கள் யாவை?
7. அக்காரக்கனி என்பது யாரைக் குறிக்கும்?
8. கவிக்கு நிறைப்பொருளாய் நின்றான் எனப் பாடியவர் யார்?
9. சிற்றிலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் நூல் எது?
10. திருநூற்றந்தாதி யாரைப் பற்றி யார் பாடியது?
11. அறவோர் பள்ளி என்பது எதைக் குறிக்கின்றது?
12. தற்காலத் தமிழ் உரைநடையின் முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக?

13. புத்தம் வீடு புதினத்தின் ஆசிரியர் யார்?
14. இஸ்லாமிய மெய்ஞ்ஞானி மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் முதற்கண் வேண்டுவது யாது?
15. இஸ்லாமிய மூலக் கொள்கைகளான தொழுகை கலிமா ஆகியவற்றை எங்ஙனம் வழங்குவர்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

16. திருமுகப்பாசுரம் சிறுகுறிப்பு எழுதுக.
17. காஞ்சிப்புராணம் கூறும் ஒழுக்க விதிகளைக் குறிப்பிடுக.
18. நம்மாழ்வாரின் அருளிச் செயல்களை எழுதுக.
19. வைணவச் சான்றோர்கள் அருளிய சிற்றிலக்கியங்களைக் கூறுக.
20. மானிடப்பிறவியின் அருமையை வளையாபதி எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?
21. நீலகேசித் தோன்றக் காரணம் யாது?
22. கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்களைக் குறிப்பிடுக.
23. தேவ மாதா அந்தாதி – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

24. (அ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) திருவிளையாடல் புராணம் பற்றி விளக்கி வரைக.

25. (அ) ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சமணத் தமிழ்க் காப்பியங்களைத் தொகுத்தெழுதுக.

26. (அ) பௌத்தச் சமயக் காப்பியம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றிக் கட்டுரை எழுதுக.

❋ ❋ ❋